# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## மாதிரிப் பரீட்சை - VII
### வரலாறு I

தரம் - 11 | சுட்டெண்:- | நேரம்:- 1 மணித்தியாலம்

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) இலங்கையின் வரலாறு பற்றி அறிவதற்கு பயன்படும் வெளிநாட்டு இலக்கிய மூலாதாரமான "டிமுண்டோ" என்ற நூலின் ஆசிரியர்
1) அரிஸ்ரோட்டில் 2) மெகஸ்தனீஸ் 3) பிலினி 4) பெரிப்ளஸ் மாரிஸ்

02) விஜயன், உபதிஸ்ஸ, அநுராத ஆகியோர் இலங்கையில் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்ட நதி
1) மகாவலி கங்கை 2 வளவகங்கை 3) கோணநதி 4) கதம்பநதி

03) பின்வருவனவற்றுள் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் வாழ்ந்த இடத்தினை மட்டும் தரும் விடைத்தொகுதி
1) கித்துல்கல, பொம்பரிப்பு, ஆனைமடுவ 2) நுவரெலியா, அம்பகமுவ, ஹுங்குராங்கெத்த
3) நல்லூர், சித்துல்பவ்வ, விந்தனை 4) அம்பாந்தோட்டை, அத்தனகல்ல, மகியங்கணை

04) வடமேற்கு எல்லையூடாக இந்தியாவிற்குள் இடம்பெற்ற படையெடுப்பும், புலப்பெயர்ச்சிகளும் பெரும்பாலும் நடைபெற்ற கணவாய்
1) போலன் 2) மக்ரான் 3) கோமல் 4) கைபர்

05) இலங்கை வரலாற்றில் சிறப்பாக மருத்துவக் கலையை அறிந்து மக்களுக்கு தொண்டாற்றிய மன்னனாக சூளவம்சத்தில் குறிப்பிடப்படுபவன்.
1) 2ம் பராக்கிரமபாகு 2) புத்ததாசன் 3) மகாசேனன் 4) தாதுசேனன்

06) ஜாரிசபை மூலம் வழக்குகளை விசாரிக்கும் முறையை அறிமுகப்படுத்திய ஆளுனர்
1) எட்வேட்பாண்ஸ் 2) தோமஸ்மெயிற்லண்ட்
3) பிரடிக் நோர்த் 4) ரொபேட் பிரவுண்றிக்

07) "விசுத்தி மார்க்கு சன்னய" என்ற நூல் எழுதப்பட்ட யுகமும் அதனை எழுதக் காரணமான மன்னனும்
1) கம்பளை, 3ம் பராக்கிரமபாகு 2) கோட்டை, 6ம் பராக்கிரமபாகு
3) தம்பதெனியா, 2ம் பராக்கிரமபாகு 4) யாப்பகூவ, 1ம் புவனேகபாகு

08) அட்டவணை A நிரலில் தரப்பட்டுள்ளதற்கு பொருத்தமாக B நிரலில் சரியான விடையாக அமையக் கூடியவற்றைத் தெரிவு செய்க

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. இஸபெல்லா அரசி | A - வத்திக்கான் |
| 2. புரட்டஸ்தாந்து சமயம் | B - பிரான்ஸ் |
| 3. வில்லியம்ஷேக்ஸ்பியர் | C - ஸ்பானியா |
| 4. பாப்பரசர் | D - மாட்டின் லூதர் |
| 5. கோல் தேசம் | E - இங்கிலாந்து |

1) BAECD 2) CAEBD 3) CDEAB 4) DACEB

09) கி. பி. 1526 இல் மொகலாய ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்த விடயம்
1) ஜெசியா வரி நீக்கம்
2) மன்சத்தார் முறை அறிமுகம்
3) பனிபட்போர்
4) கோரி முகமதுவின் ஆக்கிரமிப்பு

10) சுமத்திராவில் பலன்கே என்ற இடத்தில் பெறப்பட்ட அவலோகிதேஸ்வரர் சிலைக்கு ஒப்பாக இலங்கையில் காணப்படும் சிலை
1) சித்துள்பவ்வ 2) அவுக்கணை 3) மாளிகாவில 4) தொழுவில

11) தென் இந்தியாவில் காணப்படும் வரதராஜர் கோயில், கல் இரதக் கோயில் போன்றவை அமைக்கப்பட்ட காலம்
1) சோழர் காலம்
2) பாண்டியர் காலம்
3) பல்லவர் காலம்
4) விஜயநகர பேரரசு காலம்

12) ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளில் இடம் பெறாத விடயங்களில் ஒன்று
1) கிறிஸ்தவ திருச்சபையின் ஆதிக்கம் வீழ்ச்சியடைதல்
2) அரசர்களிடம் நிரந்தர இராணுவப் படை இல்லாமை
3) வணிகவாதம் காணப்பட்டமை
4) ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயம் பிளவுபட்டமை

13) முழு நாட்டையும் ஒன்றுபடுத்தி ஒரு ஆட்சிக்கு கீழ் கொண்டுவரும் துட்டகைமுனுவின் வேலைத்திட்டம் நிறைவேறுவதற்கு தூரநோக்குடன் அடித்தளத்தை உருவாக்கியவர்
1) பௌத்தபிக்குமார்
2) சத்தாதீஸ மன்னன்
3) கவந்தீசமன்னன்
4) எல்லாளன்

14) திரிபீடகம் முதன் முதலில் நூல் வடிவம் பெற்ற போது ஆட்சியாளன்
1) Iம் பராக்கிரமபாகு 2) துட்டகைமுனு 3) வலகம்பா 4) வசபன்

15) இலங்கையின் பிரதிநிதித்துவ ஆட்சி முறையின் ஆரம்பமாகக் கொள்ளப்படும் யாப்பு
1) மனிங் யாப்பு 2) மக்கலம் யாப்பு 3) கோல்புறூக் யாப்பு 4) டொனமூர் யாப்பு

16) பிரதேச வாரிப் பிரதிநிதித்துவ முறையினை முதன் முதலில் அறிமுகப்படுத்திய யாப்பு
1) டொனமூர் 2) சோல்பரி 3) மக்கலம் 4) மனிங்

17) கீழே தரப்பட்ட காரணங்களின் அடிப்படையில் இராசதானியாகத் தெரிவு செய்யப்பட்ட நகரம்
✲ மகாவலிகங்கை நதிப்பள்ளத்தாக்கில் அமைந்திருந்தமை
✲ தலைநகராவதற்கு முன் உப நகராக விளங்கியமை
✲ சிவனொளிபாதமலைக்குச் செல்லும் சந்தியில் அமைந்திருந்தமை
✲ பல மலைகளால் சூழப்பட்ட சமவெளிப் பிரதேசத்தில் அமைந்திருந்தமை
1) கண்டி 2) யாப்பகூவ 3) கம்பளை 4) தம்பதெனியா

18) A - வீரகேசரி C - தினமின
B - இந்துசாசனம் D - தினகரன்
ஆகிய இலங்கையின் பத்திரிகைகள் உருவான காலத்தை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடைத் தொகுதி
1) BACD 2) BCAD 3) BDAC 4) CBAD

19) "நாடுகளுக்கு சுதந்திரம் தேவை, இனங்களுக்கு விடுதலை தேவை, மக்களுக்கு புரட்சி அவசியம்" இதனைக் குறிப்பிட்ட தலைவர்
1) மாவோசேதுங்
2) சென் - என்லாய்
3) சங் - யாத் - சென்
4) யுவாங் - ஷி - காயிகே

20) 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் பலம் வாய்ந்த நாடுகள்
1) ஜேர்மனி, பிரான்ஸ் 2) பிரித்தானியா, பிரான்ஸ்
3) போர்த்துக்கல், ஸ்பெயின் 4) ஸ்பெயின், பிரான்ஸ்

21) அச்சு நாடுகள் அணியில் அங்கத்துவம் பெற்ற நாடுகள்
1) ஜேர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் 2) கனடா, பிரான்ஸ், ரஷ்யா
3) ரஷ்யா பிரான்ஸ், ஜேர்மனி 4) ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான்

22) "இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனியான இராட்சியம் தேவை" என்ற கருத்தை முதல் முதலில் வெளிப்படுத்தியவர்
1) முஹம்மது அலிஜின்னா 2) பெனார்ஷி பூட்டோ
3) மொகமட் அல்லாமா இக்பால் 4) சுபாஸ் சந்திரபோஸ்

23) பிரித்தானியர் ஆட்சிக்காலம் இலங்கையில் சமூக மாற்றங்கள் பல இடம்பெற்ற காலமாகும். இக்காலத்தில் நிகழ்ந்த முக்கியம் வாய்ந்த சமூகப் போக்கு
1) தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
2) பாராளுமன்ற அரசியல் முறை ஏற்பட்டமை
3) நடுத்தர வகுப்பினர் தோற்றம் பெற்றமை
4) ஐரோப்பியரின் சமயங்கள் இந்நாட்டில் பரவியமை

24) எமது நாட்டிற்கு ஸ்ரீலங்கா என்ற பெயரை அரசியலமைப்பில் உள்ளடக்கிய வேளை பிரதம மந்திரி பதவியை வகித்தவர்
1) D. S. சேனாநாயக்க 2) S. W. R. D பண்டாரநாயக்கா
3) J. R. ஜெயவர்த்தன 4) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

25) 1803 இல் கொழும்பில் இருந்து கண்டிக்குச் சென்ற ஆங்கிலப் படையின் தளபதி
1) மெக்டோவல் 2) பாபட் 3) ஜோன் பைபஸ் 4) வில்சன்

26) இலங்கையில் கூடுதலான கல்வெட்டுக்களை உருவாக்கிய மன்னனாகப் போற்றப்படுபவன்
1) Iம் பராக்கிரமபாகு 2) நிஸ்ஸங்கமல்லன் 3) தேவநம்பியதீசன் 4) வலகம்பா

27) மௌரியப் பேரரசை உருவாக்குவதற்கு உறுதுணையாக விளங்கிய அரசியல் அறிஞன்
1) கௌடில்லியன் 2) மாக்கியவல்லி 3) கிருஸ்ணதேவராஜர் 4) அரசகேசரி

28) இலங்கையின் பண்டைய நீர்ப்பாசன தொழில்நுட்பம் பற்றி அறிய உதவும் முக்கிய வெளிநாட்டு மூலாதாரம்
1) மகாவம்சம் 2) இராமாயணம் 3) பூஜாவலிய 4) இராஜதரங்கனி

29) "இந்தியாவின் நெப்போலியன்" என அழைக்கப்பட்ட மன்னன்
1) சமுத்திரகுப்தன் 2 சந்திரகுப்தன் 3) ஸ்கந்தகுப்தன் 4) குமாரகுப்தன்

30) கல்லோயா, கலாஓயா ஆகிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள்
1) விஜித கிராமம், அநுராத கிராமம் 2) கதிர்காமம், மகாகமம்
3) கதிர்காமம், தீகவாவி 4) தீகவாவி, விஜித கிராமம்

31) குப்த பேரரசில் பிரதேச நிர்வாக அலகு அழைக்கப்பட்ட பெயர்
1) கம்சபா 2) புக்தி 3) ரட்டசசம 4) பஞ்சாயத்து

32) பின்வருவனவற்றில் உன்னதமான கலைத் திறனுக்கும் பாதுகாப்பான கோட்டை என்ற வகையிலும் முக்கியம் பெறுவது
1) ருவன்வெலிசாய 2) சிகிரியா 3) மிகிந்தலை 4) கண்டக சைத்தியம்

33) சவோய் பிரதேசத்தில் பிறந்து ஆரம்ப வாழ்க்கையில் பல இன்னல்களை சந்தித்து செஞ்சட்டைப் படையின் மூலம் இத்தாலியை ஒற்றுமைப்படுத்துவதில் தனது பங்களிப்பை வழங்கியவர்
1) நெப்போலியன் 2) கரிபால்டி 3) பிஸ்மார்க் 4) ஜிலோபோடி

34) 1818 போராட்டத்தின் விளைவாக நிர்வாக ரீதியான ஆலோசனை வழங்க பிரித்தானியரால் அனுப்பி வைக்கப்பட்டவர்
1) கோல்புறூக் 2) கமறன்
3) மியுறன் 4) ரெபட் வில்மட்ஹோர்ட்டன்

35) கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான சிலுவைப்போர் நடைபெறுவதற்குக் காரணமான நகரம்
1) ஜெனீவா 2) கொன்ஸ்தாந்திநோபிள்
3) பீசா 4) ஜெருசலேம்

36) A - தேசிய அரசுப் பேரவை
B - விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
C - பெயரளவில் நிறைவேற்று ஜனாதிபதி
D - நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி
E - பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு
மேலே குறிப்பிட்ட அரசியல் ஆலோசனைகளில் 1972 அரசியல் யாப்பில் இடம்பெற்றவை
1) A, C 2) A, D 3) B, C 4) B, D

37) முதலாம் உலக மகாயுத்தத்துடன் தொடர்புடையது
1) அல்சேஸ் லோறைன் பிரச்சினை 2) போலந்தின் மீதான படையெடுப்பு
3) சுயஸ் கால்வாய் நெருக்கடி 4) ரொடிஷியாவுக்கு எதிரான தடைகள்

38) இலங்கையில் ஆளுநர்நாயகம் பதவிக்கு முதல் முதலில் நியமிக்கப்பட்டவர்
1) பிரட்ரிக் நோர்த் 2) றொபட் பிறவுண்றிக்
3) டொனமூர் பிரபு 4) சோல்பரிப் பிரபு

39) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் தத்தவத்தை அடிப்படையாகக் கொண்ட புரட்சி
1) பிரான்சியப் புரட்சி 2) ரஷ்யப் புரட்சி 3) சீனப் புரட்சி 4) ஆங்கிலப் புரட்சி

40) வட அத்திலாந்திக் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகளின் அமையம்
1) நேட்டோ 2) வார்சோ 3) மார்ஷல்திட்டம் 4) கொமின்வோம்

**வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்**

**மாதிரிப் பரீட்சை - VII**

**வரலாறு II** **2941**

| தரம் - 11 | சுட்டெண்:- | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

- ❖ பகுதி I இல் 1ம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி - I

01) (அ) கீழே இல (i) இல் தரப்பட்ட வரலாற்று இடங்கள் அனைத்தையும் தரப்பட்ட இலங்கைப் படத்திலும் இல (ii) இல் தரப்பட்டவற்றை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i)

| | | | |
|---|---|---|---|
| செங்கடகல | மினிப்பே அணை | கொடவாய | பொம்பரிப்பு |
| கற்பிட்டி | பேராதனை | மத்தள | யான்ஓயா |
| கந்தரோடை | கல்லோயா நீர்த்தேக்கம் | | |

(10 புள்ளிகள்)

(ii)

| | | | |
|---|---|---|---|
| அலெக்சாந்திரியா | தாய்வான் | சிந்துநதி | அங்கோவாட் |
| ரோம் | மெக்கா | பாரசீகக்குடா | பத்தேவியா |

(8 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D யில் தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுடனும் தொடர்புடைய இடங்களை ஒழுங்கு முறைப்படி உமது விடைத்தாளில் எழுதுக.

A - வட இந்தியாவில் முக்கிய அரசாக விளங்கிய மகதத்தின் நந்தவம்ச ஆரம்ப ஆட்சியாளன்

B - சோழர்களிடம் இருந்து பொலநறுவையை மீட்ட ஆட்சியாளன்

C - 2ம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பானில் அணுகுண்டு வீசுவதற்கு அனுமதியளித்த அமெரிக்க ஜனாதிபதி

D - கி.பி. 1521 ஆம் ஆண்டில் கோட்டை இராச்சியம் மூன்றாக பிளவுபட்டமைக்கு காரணமான அரசியல் நிகழ்வு (4 புள்ளிகள்)

(ii)



1. அருகில் காட்டப்பட்ட கலைப்படைப்பை பெயரிடுக.
2. இதனை வரைந்தவர் யார்?
3. இவ் ஓவியம் சிறப்புப் பெறக் காரணம் என்ன?
4. இவரால் வரையப்பட்ட ஏனைய பிரபல்யம் பெற்ற ஓவியம் ஒன்றின் பெயரைத் தருக.

(4 புள்ளிகள்)

(iii)



1. அருகிலுள்ள நிர்மானிப்பின் பெயர் யாது?
2. இது எக்காலத்திற்கு உரியது?
3. இதனை உருவாக்கியவர் யார்?
4. இதன் சிறப்பம்சம் யாது?

(4 புள்ளிகள்)

## பகுதி - II

02)

1. வரலாற்றை கற்பதற்கு உதவும் தொல்பொருள் மூலாதாரங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)
2. பண்டுகாபயனின் ஆட்சிக்காலம் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)
3. ஆரியக் குடியிருப்புக்களில் அதிகமானவை மேட்டு நிலங்களில் அமையாது ஈரலிப்பான தாழ் நிலப்பகுதியில் அமைக்கப்பட்டமைக்கான காரணங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)
4. "இலங்கையில் தனித்துவக் கலாசாரத்தின் வேர்கள் ஊன்றிய காலம் தேவநம்பியதீசன் காலமே" இக்கூற்றினை வலுப்படுத்தும் கூற்றுக்கள் 3 தந்து விளக்குக. (6 புள்ளிகள்)

03)

1. பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட அரசர்களைப் பெயரிடுக.
   - A. மினிப்பே என்ற இடத்தினை நிர்வாக நகரமாக்கிய பிராந்திய ஆட்சியாளன்
   - B. கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித என அழைக்கப்பட்டவன்
   - C. தலதாமாளிகையின் பத்திரிப்பினை அழகுற அமைத்தவன் (3 புள்ளிகள்)
2. முதலாம் விஜயபாகு மன்னனின் வெளிநாட்டுத் தொடர்புகள் 2 எழுதுக. (4 புள்ளிகள்)
3. கி.பி. 13 முதல் கி.பி 15 ம் நூற்றாண்டு வரை இலங்கையின் இராசதானிகள் மாறுதலடைய வழிவகுத்த அரசியல் சமூகக் காரணிகள் இவ்விரண்டை குறிப்பிட்டு ஏதாவது ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)
4. 6ம் பராக்கிரமபாகுவின் சேவைகள் மூன்றினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

04)

1. புராதன காலத்தில் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்பினை பேணி வந்த நாடுகள் 3 தருக. (3 புள்ளிகள்)
2. புராதன காலத்தில் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
3. இலங்கை வெளிநாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொண்டு இருந்தமைக்கான சான்றாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. இலங்கை வெளிநாடுகளுடன் தொடர்பைப் பேணியதால் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக நன்மைகள் மூன்றினை குறிப்பிட்டு விபரிக்குக. (6 புள்ளிகள்)

05)

1. இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய ஆளுநர்கள் மூவரின் பெயர் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. போர்த்துக்கேயர் மலைநாட்டை ஆக்கிரமித்த சந்தர்ப்பங்கள் இரண்டினை குறிப்பிட்டு அதற்கு எதிராக செயற்பட்ட மலைநாட்டு ஆட்சியாளர்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. ஒல்லாந்தர் மலை நாட்டுடன் நட்புறவுடன் செயற்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. 1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் மலைநாட்டு ஆக்கிரமிப்பு வெற்றி பெறுவதற்கு வழிவகுத்த 3 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

06)

1. இலங்கையை ஆட்சி புரிந்த ஐரோப்பிய இனத்தவர் மூவரின் பெயர் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றம் ஒன்றையும், பொருளாதார மாற்றம் ஒன்றினையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. இலங்கையின் இயற்கைத் துறைமுகமாகிய திருகோணமலை பலரது கவனத்தை ஈர்த்தமைக்கு ஏதுவான காரணங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. பிரித்தானிய வர்த்தக சங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகள் இலங்கையில் ஏற்பட்டமைக்கு ஏதுவான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விபரிக்குக. (6 புள்ளிகள்)

பகுதி - III

07)

1. ஆரியர்களினால் வணங்கப்பட்ட தெய்வங்கள் மூன்றின் பெயர் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. பதினாறு இராட்சியங்களுள் பலம் வாய்ந்த இராட்சியமாக மகதம் எழுச்சியடைவதற்கு காரணமான இரு விடயங்களை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. "குப்தர் காலம் இந்திய வரலாற்றில் பொற்காலம்" என்பதற்கு ஆதாரமான மூன்று விடங்களை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. மௌரியப் பேரரசின் நிர்வாகப் பண்புகள் மூன்றினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

08)

1. ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்குவதில் முன்னோடியாக விளங்கிய தலைவர்கள் மூவரின் பெயர்களை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு நிறுவனங்களில் ஏதாவது நான்கின் பெயர்களைத் தருக. (4 புள்ளிகள்)
3. உறுப்பு நாடுகளின் நலனுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகளின் இணை நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றின் பணிகள் ஒவ்வொன்று தருக. (5 புள்ளிகள்)
4. "இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இதுவரை யுத்தம் ஒன்று ஏற்படாமல் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை செயற்பாடுகள் காரணமாக அமைகின்றது" இக்கூற்றுக்கு ஏதுவான உதாரணங்கள் நான்கினை கூறி விபரிக்குக. (6 புள்ளிகள்)

09)

1. கீழ்க்காணும் ஆட்சியாளர்களின் அரச வம்சங்களை குறிப்பிடுக.
   - (a) குதுபுதீன் ஐபெக்
   - (b) அலாவுதீன் கல்ஜி
   - (c) முகமதுபின் துக்களக் (3 புள்ளிகள்)
2. விஜயநகரப் பேரரசின் முக்கியத்துவத்தினை இரு விடயங்கள் மூலம் விளக்குக. (4 புள்ளிகள்)
3. "அக்பர்" சிறந்த ஆட்சியாளர் என்பதற்கு ஏதுவான சம்பவங்கள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)
4. இஸ்லாமியர்கள் இந்தியாவைக் கைப்பற்ற எண்ணியமைக்கு ஏதுவான காரணங்கள் மூன்றினைக் கூறி விளக்குக. (6 புள்ளிகள்)

10)

1. யப்பானில் நிலவிய மானியமுறை யுத்தங்களை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வந்த மூன்று வீரர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. இந்திய மக்களுக்கு மிகப்பெரிய சேவையாற்றிய மகாத்மா காந்தி அவர்களிடமிருந்து நீர் பெறக்கூடிய படிப்பினைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
3. டோகுகாவா, ஷோகுன் காலத்து முக்கிய அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)
4. சீனப்புரட்சியில் "மா - ஓ - சேதுங்" ஆற்றிய பணிகளை மூன்று விடயங்கள் ஊடாக விபரிக்குக. (6 புள்ளிகள்)




N